இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 1.10.2026

பா.ஜ.க.வுக்கு எதிராக என்ன செய்தார்?

டெல்லியில் இருக்கும் தி.மு.க. தான் பா.ஜ.க.வாம். தமிழ்நாட்டில் இருக்கும் பா.ஜ.க. தான் தி.மு.க.வாம். இப்படி கண்டுபிடித்திருக்கிறார் விஞ்ஞானி விஜய். மண்டபத்தில் யாரோ எழுதிக் கொடுத்ததை அதன் அர்த்தம் புரியாமல் உளறுவது என்பது இதுதான்.

விஜய் பேசி இருப்பது 'துக்ளக்' குருமூர்த்திக்கே பொறுக்கவில்லை. தலையில் 'நங்கென்று' கொட்டிவிட்டார் குருமூர்த்தி. 'விஜய் இப்படி பேசி இருப்பது அவரது துளியும் அரசியல் புரிதலற்ற தன்மையையே வெளிப் படுத்தி இருக்கிறது. எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து கொண்டு வந்து பேசுவதானாலும் கூட, ஸ்கிரிப்டைப் படித்துப் பார்க்கும் போது, 'இது அபத்தமாக இருக்கிறதே, கேட்பவர்கள் நகைக்க மாட்டார்களா?' என்று முதல்வருக்குத் தோன்றாமல் போனது அவரது அரசியல் அஞ்ஞானத் தையே காட்டுகிறது. சித்தாந்த ரீதியாக நேர் எதிரெதிர் நிலையில் இருக் கும் இரு கட்சிகளை எப்படி ஒரே தட்டில் வைக்க முடியும்?" என்று குரு மூர்த்தியே எழுதி விட்டார்.

பா.ஜ.க.வைப் பற்றி பேசுவதற்கு முதுகெலும்பு உண்டா விஜய்க்கு? இத்தனை பொதுக்கூட்டங்கள் பேசி இருக்கிறாரே! இதில் எத்தனை கூட் டத்தில் பா.ஜ.க.வுக்கு எதிராகப் பேசி இருக்கிறார்? 'அவங்க பாசிசம் என் றால், இவங்க என்ன பாயாசமா?' என்று கேட்டது கூட தி.மு.க. மீதான விமர்சனமே தவிர, பா.ஜ.க. மீதான விமர்சனம் அல்ல. பாசிசத்தை இது வரை எதிர்க்காமல், பம்மிக் கொண்டு கிடப்பவர் தான் விஜய். இவருக்கு தி.மு.க.வின் பா.ஜ.க. எதிர்ப்பைக் கேள்வி கேட்க எந்த அருகதையும் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் பா.ஜ.க.வைப் பற்றியோ மோடியைப் பற் றியோ யார் பேசினாலும் நீக்கப்படுகிறது த.வெ.க. ஆட்சியில். மற்றவர் கள் அல்ல, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் வன்னி அரசு, பா.ஜ.க. குறித்து பேசியதை நீக்குகிறார் சபாநாயகர். அமைச்சர் பேசுவதையே நீக்கும் அளவுக்கு தான் இவர்களது பா.ஜ.க. பாசம் உள்ளது.

விஜய் அம்மாவை விமர்சித்துப் பேசியது பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன். அவரைக் கண்டிக்கக் கூட முதுகெலும்பு இல்லா தவர் தான் விஜய். அதையும் தி.மு.க. சொன்னதாக மடை மாற்றினார் விஜய்.

விஜய் முதலமைச்சராக காங்கிரஸ் கட்சி தனது ஐந்து உறுப்பினர் ஆத ரவைக் கொடுத்துள்ளது. அதற்குப் பதிலாக இரண்டு அமைச்சர் பதவிகளை காங்கிரஸ் கட்சி பெற்றுள்ளது. உடனடியாக த.வெ.க. கூட்டணியில் போய் சேர்ந்து விட்டது காங்கிரஸ். இந்நிலையில் விஜய்யை 'இந்தியா' கூட்ட ணிக்குள் கொண்டு போய் சேர்க்க காங்கிரஸ் கட்சி எவ்வளவோ முயன்று பார்த்தது முடியவில்லை. 'இந்தியா' கூட்டணியில் சேர்ந்து மோடி - அமித் ஷாவை எதிர்க்க விஜய் என்ன மாவீரனா? உஷார் பார்ட்டியான விஜய், 'இந்தியா' கூட்டணிக்குள் வரவே இல்லை.

கேரள மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் தினத்தன்று வருவதாகச் சொன்ன விஜய் வரவில்லை. டெல்லியில் நடந்த 'இந்தியா' கூட்டணிக் கூட்டத்துக்கு வருவதாகச் சொன்ன விஜய் வரவில்லை. ராகுல்காந்தியையும் விஜய்யையும் ஒரே மேடையில் ஏற்றி தனது புத்த கத்தை வெளியிட திட்டமிட்டார் வைகோ. அதற்கும் செல்லவில்லை விஜய்.

'விஜய் வந்தால் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாது, அதனால் அவரை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டோம்' என்றார் வைகோ. மதுரை யில் பேரிகாட் அடிப்பதைப் போல டெல்லியில் பத்து கோடி செலவழித்து பேரிகாட் அடிக்க வேண்டியது தானே? இதெல்லாம் ஒரு காரணமா? உண்மையான காரணம், ராகுல்காந்தியுடன், 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் மேடை ஏறிவிடக் கூடாது என்பது தான்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மட்டுமல்ல, ஆட்சிக்கு வந்த பிறகும் பா.ஜ.க.வின் எந்த அரசியலையும் விஜய் எதிர்க்க வில்லை. அவரும் பேச வில்லை. அவரால் நியமிக்கப்பட்டுள்ள வாய்வீரர்களையும் பேச விடுவதும் இல்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இந்தியத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் விவகாரத்தில் த.வெ.க. நிலைப்பாடு மிகமிக மோச மாக இருந்தது. 'ஞானேஷ்குமாரை பதவி விலகச் சொல்வது திசை திருப் பும் அரசியல் ஆகும்' என்று சொல்லி இருக்கிறார் த.வெ.க. அமைச்சர் ராஜ்குமார். ஞானேஷ்குமார் செய்த மோசடித்தனங்களை அவருடன் இருக்கும் இரண்டு தேர்தல் ஆணையர்களே அம்பலப்படுத்தி இருக்கி றார்கள். பா.ஜ.க. நீங்கலாக இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்று சொல்லி இருக்கின்றன. ஞானேஷ்குமார் கைது செய்யப்பட வேண்டும் என்றே கோரிக்கை வந்துள்ளது.

விஜய்யை இங்கு ஆதரிக்கும் காங்கிரஸ் கட்சியும், விடுதலைச் சிறுத் தைகளும், வைகோவும் கூட ஞானேஷ்குமாரைக் கண்டித்துள்ளார் கள். ஆனால் இதை திசைதிருப்பும் அரசியல் என்று த.வெ.க. சொல்கிறது என்றால் பச்சைப் பாசிசமாக இருப்பவர் விஜய் தானே?

வாங்கிய சம்பளத்தை மறைத்த வழக்குகள் இருக்கிறது. எப்படி எதிர்ப் பார் பா.ஜ.க.வை? வருமான வரி வழக்குகள் இருக்கிறது. எப்படி எதிர்ப் பார் பா.ஜ.க.வை?

கரூரில் 41 பேர் கொலையான வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. எப்படி எதிர்ப்பார் பா.ஜ.க.வை? குதிரை பேரம் நடத்தியதற்கான புகார்கள் ஆளுநரின் முன்னால் இருக்கிறது. எப்படி எதிர்ப்பார் பா.ஜ.க.வை?

குதிரை பேரம் நடத்தியது தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. எப்படி எதிர்ப்பார் பா.ஜ.க.வை? இவை எல்லாம் ஒழுங்காக முறையாக நடத்தப்பட்டால் விஜய் பதவியிலேயே இருக்க முடியாது. எப்படி எதிர்ப்பார் பா.ஜ.க.வை?



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்தும், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில், தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார். உடன் சட்டமன்ற தி.மு.கழக கொறடா எ.வ.வேலு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட செயலாளர் சுந்தர், வசந்தம் கார்த்திகேயன்.எம்.எல்.ஏ., த.உதயசூரியன் உட்பட கழக முன்னோடிகள் உள்ளனர்.

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சுற்றுப்பயண விவரம்:-

நாள் : 03.10.2026 (சனிக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 4.30	குண்டடம் மேற்கு ஒன்றியம்	நொச்சிப்பாளையம்
2.	மாலை 5.30	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	தளவாய்பட்டணம்
3.	மாலை 6.00	தாராபுரம் நகரம்	பெரியார் சிலை அருகில்
4.	இரவு 7.00	தாராபுரம் நகரம்	வடதாரை

தேர்தல் பணிக்குழு

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சி! விளையாட்டுத் துறை சாதனை வெளிப்பாடு!

ஆசிய பெண்களுக்கான 400மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்பந்தயத்தில் சாதனை நிகழ்த்திய வித்யா ராமராஜுக்கு பாராட்டு!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் வாழ்த்து!

சென்னை, அக்.1- தலைவர் மு.க.ஸ்டாலின் தலை மையிலான திராவிட மாடல் அர சால் விளையாட்டுத் துறைக்கு அளிக்கப்பட்ட ஆதரவும், கட்டமைப் புகள் மீதான முதலீடும் ஜப்பா னில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சிறப் பான பலனை அளித்து வருகிறது என்றும், 20 வது ஆசிய பெண் களுக்கான 400மீட்டர் தடை தாண்டும் ஓட்டப்பந்தயத்தில் சாதனை நிகழ்த்திய வித்யா ராம ராஜுக்கு பாராட்டுக்கள் என்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதி வில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது ட்விட்டர் பதிவு வருமாறு:-

கழகத்தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் தலைமையி லான திராவிட மாடல் அரசால் விளையாட்டுத் துறைக்கு அளிக் கப்பட்ட ஆதரவும், கட்டமைப்பு கள் மீதான முதலீடும் தற்போது ஜப்பானின் ஜச்சி-நகோயாவில் நடைபெற்று வரும் 20வது



ஆசிய விளையாட்டுப் போட்டி களில், சிறப்பான பலனை அளித்து வருவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்களுக்கான 400 மீட் டர் தடைதாண்டும் ஓட்டப்பந்த யத்தில் 54.75 வினாடிகளில் பந்தயத்தை நிறைவு செய்து புதிய சாதனையைப் படைத் துள்ள தமிழ்நாட்டின் மிகச் சிறந்த தடகள வீராங்கனை வித்யா ராமராஜுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வித்யா ராமராஜின் விளை யாட்டுத் திறமையை அங்கீ கரித்து, அவருக்கு ELITE பிரிவின் மூலமும், தமிழ்நாடு சாம்பி யன்ஸ் அறக்கட்டளை (TNCF) மூலமும் தேவையான உதவி களை திராவிட மாடல் அரசு வழங்கியுள்ளது.

எளியகுடும்பப்பின்னணியில் இருந்து வந்த வித்யா ராமராஜ், இன்று லட்சக்கணக்கான இளை ஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

மேலும், இந்தியாவிற்காக ஆசிய விளையாட்டுப் போட்டி களில் பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள அபினயா, விஷால், ராஜேஷ் ரமேஷ், அபய் சிங், ஜோஸ்னா சின்னப்பா, வேல வன் செந்தில்குமார், பரணிகா, ஹரிஹரன் மற்றும் காமலினி ஆகிய தமிழ்நாட்டு வீரர், வீராங் கனைகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டு களைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வாயி லாக வழங்கப்பட்ட நிதியுதவி மற் றும் 3 சதவீத விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் 300 விளை யாட்டு வீரர், வீராங்கனை களுக்கு வழங்கப்பட்ட அரசு வேலைவாய்ப்பு போன்ற நடவ டிக்கைகள், நமது விளையாட்டு வீரர்கள் இத்தகைய உயரங் களை எட்டுவதற்கு குறிப்பிடத் தக்க பங்காற்றியுள்ளன.

விளையாட்டு வீரர், வீராங் கனைகள் தங்களது திறமை களை தொடர்ந்து வளர்த்துக் கொண்டு, மேலும் பல சாதனை களைப் படைக்கும் வகையில், தற்போதைய அரசு தொடர்ந்து தேவையான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கும் என நம்புகிறேன்.

நமது விளையாட்டு நட்சத்தி ரங்கள் தொடர்ந்து உயர்ந்து, உலக அரங்கில் தமிழ்நாட்டிற் கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கட்டும்!

இவ்வாறு தமிழ்நாடு சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டார்.